# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண்.** 88/2022 ( Joint Trial 227/2023)

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ம் நாள் திங்கட்கிழமை PW1-இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 18.12.2023 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | ஆறுமுகம் (PW-1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

25.06.2009 தேதியிட்ட எனது மூத்த சகோதரர் குமாரசாமி என் சகோதரர் வரதராஜனுக்கு எழுதிக்கொடுத்த சோடிக்கப்பட்ட செட்டில்மெண்ட ஆவணத்தின் பதிவு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணைக்காக தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**